සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023 (2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023 (2024)

හින්දු ධර්මය I
இந்து சமயம் I
Hinduism I

**42 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**அறிவுறுத்தல்கள்:**

- ※ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில்** புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

● **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து** விடயங்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **ஒன்று** ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**1.** (1) சங்கிதை (2) ஆகமம் (3) உபநிடதம் (4) ஆரணியகம் (5) பிராமணம்

**2.** (1) தாஸ்யம் (2) காந்தம் (3) கற்பம் (4) மதுரம் (5) சகியம்

**3.** (1) வாமதேவம் (2) தற்புருஷம் (3) ஈசானம் (4) அகோரம் (5) பாசுபதம்

**4.** (1) நரசிங்கர் (2) இலிங்கோற்பவர் (3) கங்காதரர் (4) நடராஜர் (5) அர்த்தநாரீஸ்வரர்

**5.** (1) கோயிற்புராணம் (2) சேக்கிழார்புராணம் (3) திருப்பதிகக்கோவை (4) ஞானாமிர்தம் (5) கொடிக்கவி

● **6** தொடக்கம் **10** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் **ஐந்து சோடிச் சொற்கள்** தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ளவை ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை. **பொருந்தாத** அச்சோடிச் சொற்களைத் தெரிவுசெய்க.

**6.** (1) பிரமயக்ஞம் - மேலான பரம்பொருளுக்குச் செய்யும் வழிபாடு
(2) பூதயக்ஞம் - பூதகணங்களுக்குச் செய்யும் வழிபாடு
(3) பிதிர்யக்ஞம் - இறந்துபோன மூதாதையர்களுக்குச் செய்யும் வழிபாடு
(4) தேவயக்ஞம் - உருவ வடிவமான கடவுளுக்கு ஆற்றும் வழிபாடு
(5) மானிடயக்ஞம் - மானிடன் பொருட்டுச் செய்யும் வழிபாடு

**7.** (1) அறம் - தர்மம்
(2) பொருள் - அர்த்தம்
(3) இன்பம் - காமம்
(4) வீடு - மோட்சம்
(5) பிரம்மச்சரியம் - இல்லறநிலை

[பக். 2 ஐப் பார்க்க

8. (1) நம்மாழ்வார் - ஸ்ரீ வைணவ குலபதி
(2) பெரியாழ்வார் - விஸ்ணுசித்தர்
(3) ஆண்டாள் - மீராபாய்
(4) மெய்கண்டதேவர் - சுவேதவனப்பெருமாள்
(5) கடையிற்சுவாமி - முத்தியானந்தர்

9. (1) வேதங்கள் - முதல்நூல்
(2) ஆகமங்கள் - பொதுநூல்
(3) உபநிடதங்கள் - தத்துவ சிந்தனை
(4) இதிகாசங்கள் - இந்துசமய கலைக்களஞ்சியம்
(5) புராணங்கள் - பௌராணிகர் மரபு

10. (1) சேயோன் - முருகன்
(2) மாயோன் - விஸ்ணு
(3) வேந்தன் - வருணன்
(4) ஆலமர் கடவுள் - சிவன்
(5) கொற்றவை - துர்க்கை

● **11** தொடக்கம் **15** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 'அ', 'ஆ' என்னும் நிரல்களின் கீழ் சில விடயங்கள் தரப்பட்டுள்ளன. 'அ' நிரலுக்கு ஏற்ற விதத்தில் 'ஆ' நிரலில் உள்ள விடயங்கள் பொருத்தமாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

11.

| அ | ஆ |
|---|---|
| (i) பெரிய கற்றளி | A - தருமராஜரதம் |
| (ii) ஜலசயனம் | B - காஞ்சி கைலாசநாதர் கோயில் |
| (iii) சிற்பக்கலைக் களஞ்சியம் | C - மாமல்லபுர கடற்கரை ஆலயம் |
| (iv) தென்திசை மேரு | D - வானவன் மாதேவீஸ்வரம் |
| (v) 2 ஆம் சிவாலயம் | E - தஞ்சைப் பெருங்கோயில் |

(1) A B D C E (2) A C B D E (3) B C A E D (4) B D A E C (5) B D E C A

12.

| அ | ஆ |
|---|---|
| (i) திருக்கோணேஸ்வரம் | A - பாவநாசம் |
| (ii) திருக்கேதீஸ்வரம் | B - மாயவன் ஆறு |
| (iii) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம் | C - பாலாவி |
| (iv) முன்னேஸ்வரம் | D - கீரிமலை |
| (v) நகுலேச்சரம் | E - கோயிற் திருக்கேணி |

(1) A C D B E (2) A C D E B (3) A C E B D (4) B D A E C (5) B E A C D

13.

| அ | ஆ |
|---|---|
| (i) இசை | A - அதர்வணம் |
| (ii) தோத்திரப் பாடல் | B - சாமம் |
| (iii) மருந்து | C - ஆரணியகம் |
| (iv) சவித்திரு | D - இருக்கு |
| (v) வனநூல் | E - ஞாயிற்றுக்கடவுள் |

(1) A D B E C (2) B A D E C (3) B D A E C (4) B E A C D (5) C A B D E

14.

| அ | ஆ |
|---|---|
| (i) சற்புத்திரமார்க்கம் | A - திருப்பாணாழ்வார் |
| (ii) அமலனாதிபிரான் | B - சம்பந்தர் |
| (iii) உழவாரத்தொண்டு | C - நாவுக்கரசர் |
| (iv) ஞானநெறி | D - சுந்தரர் |
| (v) அடியார்க்கு அடியவன் | E - மாணிக்கவாசகர் |

(1) B A C E D (2) B A D E C (3) B C E A D (4) B D E A C (5) B E A C D

[பக். 3 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

| | அ | | ஆ |
|---|---|---|---|
| **15.** | (i) பிரபத்தி | A | - மூன்று பொருட்களும் உண்மை |
| | (ii) நாலாயிர திவ்விய பிரபந்தம் | B | - ஆன்மாவின் பூரணமற்ற அறிவு |
| | (iii) ஸ்ரீபாஷியம் | C | - பிரமாண நூல் |
| | (iv) தத்துவத்திரயம் | D | - முக்திக்கான வழி |
| | (v) தர்மபூதஞானம் | E | - பிரமசூத்திர உரை |

(1) BACDE (2) DCEAB (3) DEACB (4) DEBCA (5) EADCB

- **16** தொடக்கம் **30** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் அதன் கீழே தரப்பட்டுள்ளவற்றுள் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

**16.** 'சத்யம் ஏவ ஜயதே' எனும் வாக்கியம் இடம்பெறும் உபநிடதம்
(1) முண்டக உபநிடதம் (2) சாந்தோக்கிய உபநிடதம்
(3) சுவேதாஸ்வர உபநிடதம் (4) மாண்டூக்கிய உபநிடதம்
(5) தைத்திரிய உபநிடதம்

**17.** கல்வெட்டுக்களில் உள்ள 'ஸ்வஸ்திஸ்ரீ' என்பது குறித்து நிற்கும் பொருள்
(1) 'இறைவனுக்கு வணக்கம்' (2) 'மங்களம் உண்டாகுக'
(3) 'அனைவரையும் சென்றடைக' (4) 'அரசனின் வெற்றி'
(5) 'திருவருள் சக்தி'

**18.** திருவாவடுதுறை ஆதீனம் தோற்றம் பெற்ற காலப்பகுதி
(1) சங்க காலம் (2) சங்கமருவிய காலம் (3) பல்லவர் காலம்
(4) சோழர் காலம் (5) நாயக்கர் காலம்

**19.** விநாயகரின் திருவுருவத்தில் ஒற்றைக் கொம்பு குறித்து நிற்கும் தத்துவம் யாது?
(1) உலகம் முழுவதும் வயிற்றில் உள்ளடக்கம்
(2) 'ஓம்' என்ற பிரணவ மந்திரத்தைக் குறிக்கும்
(3) தியாகத்தைக் குறிக்கும்
(4) இன்ப வடிவானவர்
(5) அன்பர்கள் கூறுவதைக் கேட்கும் ஆவல் உடையவர்

**20.** மேலைநாட்டு அறிஞர் பிரௌனி என்பவரால் 'நீர் ஒரு தெய்வீக மனிதர்' எனச் சிறப்பிக்கப்பட்டவர்
(1) சிவயோக சுவாமிகள் (2) கடையிற் சுவாமிகள்
(3) சித்தானைக்குட்டி சுவாமிகள் (4) செல்லப்பா சுவாமிகள்
(5) பெரியானைக்குட்டி சுவாமிகள்

**21.** 'பெரிய கவி' எனப் போற்றப்பட்ட குப்த மன்னன்
(1) சமுத்திரகுப்தன் (2) சந்திரகுப்தன் (3) குமாரகுப்தன்
(4) ஸ்கந்தகுப்தன் (5) பரமேஸ்வரவர்மன்

**22.** 'நரேந்திரர்' என்ற இயற்பெயர் கொண்டவர்
(1) தயானந்த சரஸ்வதி (2) சுவாமி விபுலானந்தர்
(3) மகாத்மா காந்தி (4) சுவாமி விவேகானந்தர்
(5) ராஜாராம் மோகன்ராய்

**23.** ஆரியச் சக்கரவர்த்திகளின் அரச சின்னம்
(1) மீன் (2) கருடன் (3) மயில் (4) சிம்மம் (5) நந்தி

**24.** வராக மிகிரரால் வானியல் தொடர்பில் தொகுத்தளிக்கப்பட்ட நூல்
(1) பஞ்ச சித்தாந்திகை (2) ஆரிய சித்தாந்தம் (3) புளிச சித்தாந்தம்
(4) பிரம்மஸ்புட சித்தாந்தம் (5) சரகசம்ஹிதை

**25.** 'அவையே தானே ஆய் இருவினையில்...' எனும் செய்யுள் இடம்பெறும் நூல்
(1) சிவஞானபோதம் (2) சிவஞான சித்தியார் (3) திருமந்திரம்
(4) திருவருட்பயன் (5) சிவப்பிரகாசம்

[பக். 4 ஐப் பார்க்க

**26.** ஆலயம் அமைப்பதற்குரிய இடத்தைப் பண்படுத்தல்
(1) பிரதிஷ்டை (2) கர்ஷணம் (3) உற்சவம் (4) பிராயச்சித்தம் (5) வாஸ்து சாந்தி

**27.** தைப்பொங்கலுக்கு முதல்நாள் இடம்பெறுவது
(1) அம்மன் பொங்கல் (2) சூரியப்பொங்கல் (3) காணும் பொங்கல்
(4) போகிப்பண்டிகை (5) மாட்டுப்பொங்கல்

**28.** ஆயுர்வேத மருத்துவத்தின் தந்தை எனப் போற்றப்படுபவர்
(1) ஆத்திரேயர் (2) தன்வந்திரி (3) சரகர் (4) சுஸ்ருதர் (5) ஆரியப்பட்டர்

**29.** இசுறுமுனிய சிவன் பார்வதி காதலர் சிற்பங்களின் காலம்
(1) அனுராதபுரக் காலம் (2) பொலநறுவைக் காலம்
(3) போர்த்துக்கேயர் காலம் (4) கண்டி இராச்சிய காலம்
(5) ஆரியச்சக்கரவர்த்திகள் காலம்

**30.** "......சலமிலன் பேர் சங்கரன்" எனக் கூறும் நூல்
(1) திருமந்திரம் (2) சிவஞானபோதம் (3) தேவாரம்
(4) திருவருட்பயன் (5) உண்மைநெறி விளக்கம்

- **31** தொடக்கம் **35** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் **பொருந்தாததைத்** தெரிவுசெய்க.

**31.** **சைவசித்தாந்தத்தில் பதி**
(1) உலகுக்குத் தலைவன்
(2) பஞ்ச கிருத்தியங்களைச் செய்பவன்
(3) சத்தியுடன் பிரிப்பின்றி உள்ளவன்
(4) உயிர்களுக்கு கர்மபலனை ஊட்டுபவன்
(5) ஆன்மாக்களைச் சங்கரிப்பவன்

**32.** **பிரளயாகலர்**
(1) மூவகை ஆன்மாக்களுள் ஒருவகையினர்
(2) தேகத்தோடு கூடியோர்
(3) ஆணவப் பிடிப்பிலிருந்து விடுபடாதவர்
(4) இரு மலங்களை மாத்திரம் உடையவர்
(5) கன்மத்தினால் பீடிக்கப்பட்டவர்

**33.** **சித்தர்கள்**
(1) சித்தத்தை இறைவன்பால் வைத்தவர்கள்
(2) அட்டமா சித்திகள் கைவரப் பெற்றவர்கள்
(3) ஆலய வழிபாட்டுக்கு அதிக முக்கியத்துவம் அளிப்பவர்கள்
(4) ஆன்மார்த்த வழிபாட்டை உடையவர்கள்
(5) பற்றற்ற மனத்துடன் வாழ்பவர்கள்

**34.** **திருமுருகாற்றுப்படை**
(1) நக்கீரரால் இயற்றப்பட்டது
(2) பதினொராம் திருமுறையில் உள்ளடக்கப்படுவது
(3) ஆறுபடை வீடுகள் பற்றி எடுத்துரைக்கின்றது
(4) பல்லவர் கால பக்தி இலக்கியங்களில் உள்ளடக்கப்படுவது
(5) ஆரிய - திராவிட இணைப்பைக் காட்டுகின்றது

**35.** **ஆரியப்பட்டர்**
(1) இந்திய கணித வானியலின் பிதாமகர்
(2) பூச்சியத்தின் பயன்பாட்டினை அறிமுகப்படுத்தியவர்
(3) கி.பி. 5 ஆம் 6 ஆம் நூற்றாண்டுகளுக்குரியவர்
(4) புவிச்சுழற்சியின் காலத்தைத் துல்லியமாகக் கணித்தவர்
(5) லீலாவதி என்ற கணித நூலை இயற்றியவர்

[பக். 5 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

● மேல்வரும் பகுதியில் A தொடக்கம் J வரையில் தரப்பட்டுள்ள சொற்களுள் இவ்விரண்டு சொற்கள் குறிப்பிட்டவொரு விடயத்தோடு தொடர்புடையவை. அவற்றின் பொருத்தப்பாட்டின் அடிப்படையில் **36** தொடக்கம் **40** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் பொருத்தமான சேர்மானத்தைத் தெரிவுசெய்க.

| | | | | |
|---|---|---|---|---|
| A<br>ஐந்தொழில் தத்துவம் | B<br>தமிழ் மூவாயிரம் | C<br>வடிவாம்பிகை | D<br>இந்து போர்ட் சு. இராசரத்தினம் | E<br>பரிணாமவாதம் |
| F<br>அரசமரம் | G<br>அப்பிரதக் சித்தி | H<br>மார்கழித் திருவாதிரை | I<br>சைவ மரபு பேணல் | J<br>பத்தாம் திருமுறை |

**36.** முன்னேஸ்வர ஆலயத்துடன் தொடர்புடைய சோடி
(1) CE (2) CF (3) DG (4) DF (5) GJ

**37.** திருமூலருடன் தொடர்புடைய சோடி
(1) BJ (2) CE (3) CI (4) DC (5) DF

**38.** சைவவித்தியா விருத்திச் சங்கத்துடன் தொடர்புடைய சோடி
(1) AG (2) CE (3) DI (4) EF (5) GJ

**39.** விசிட்டாத்துவைதத்துடன் தொடர்புடைய சோடி
(1) AC (2) BD (3) EB (4) EG (5) HJ

**40.** நடராஜ மூர்த்தத்துடன் தொடர்புடைய சோடி
(1) AH (2) AE (3) BE (4) BG (5) CG

● **41** தொடக்கம் **50** வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்புக்கு மிகப் பொருத்தமானதைத் தெரிவுசெய்க.

**41. வருணக் கோட்பாடு**
(1) தர்மவழியில் வாழச் செய்வது
(2) மனித வாழ்வைப் பூரணப்படுத்துவது
(3) பிராமண வருணத்திற்கு முதன்மை கொடுப்பது
(4) தெய்வத்துடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டிருப்பது
(5) பழங்கால சமுதாயக் கட்டமைப்பை வெளிப்படுத்துவது

**42. துவைதம் கூறும் விடுதலை என்பது**
(1) ஸ்ரீமன் நாராயணன் வீற்றிருக்கும் வைகுண்டத்தை அடைதல்
(2) பக்தியின் மூலம் இறையருளைப் பெறல்
(3) அறியாமையிலிருந்து விடுபடுதல்
(4) தர்ம வாழ்க்கையின் மூலம் இறையருளைப் பெறல்
(5) வாயுபகவானின் அருளின் மூலம் கிடைக்கப் பெறுதல்

**43. சுவாமி விபுலானந்தரின் சமயப் பணி**
(1) வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப் பிரார்த்தனை நடாத்துதல்
(2) பண்ணிசைப் பயிற்சிகளை நடாத்துதல்
(3) இராமகிருஷ்ண மிஷன் பாடசாலைகளின் முகாமையைப் பொறுப்பேற்றல்
(4) அநாதை இல்லங்களுக்கு அறக்கொடைத் திட்டங்களை வகுத்தல்
(5) சமயம் அநுட்டிப்பதற்குரியது என்பதை போதனையிலும் சாதனையிலும் நிலைநாட்டுதல்

**44. திருஞானசம்பந்தரின் சைவநெறி**
(1) கிரியை நெறியில் நின்றமை
(2) அரசரை மதம் மாற்றியமை
(3) பஞ்சாட்சர மந்திரத்தை போற்றியமை
(4) தலயாத்திரை செய்தமை
(5) தேவாரப் பதிகங்கள் பாடியமை



Past Papers Wiki

**45.** சித்தானைக் குட்டி சுவாமிகள்
(1) பலவகை நோய்களைக் குணப்படுத்தியமை
(2) ஈழத்துச் சித்தர்களுள் ஒருவர்
(3) இந்திய - இலங்கைப் புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை சென்றமை
(4) பெரியானைக் குட்டி சுவாமிகளின் ஆத்மார்த்த சீடராக விளங்கி ஞானம் பெற்றமை
(5) சிற்றரசர் பரம்பரையைச் சார்ந்தமை

**46.** பஞ்சாங்கம்
(1) முதல் பஞ்சாங்கம் குப்தர் காலத்தில் தோன்றியது
(2) வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் எனும் ஐந்துறுப்புக்கள் கொண்டது
(3) தேதிகள் திதிகளை அடிப்படையாகக் கொண்டது
(4) இலங்கையில் 'வாக்கிய பஞ்சாங்கம்', 'திருக்கணித பஞ்சாங்கம்' என்பன உள்ளன
(5) வராக மிகிரர் பஞ்சாங்க விடயங்களை தெளிவாகக் கூறியவர்

**47.** ஆகமமும் திருவுருவ வழிபாடும்
(1) ஆகம ஆலய அமைப்பில் திருவுருவ வழிபாடு இன்றியமையாதது.
(2) திருவுருவங்களுக்கான கல்லைத் தெரிவுசெய்தல் 'சிலாபரீட்சணம்' என ஆகமம் கூறும்.
(3) திருவுருவங்களின் பிரதிமாலட்சணத்தில் ஆகமப் பிரமாணம் முக்கியமானது.
(4) திருவுருவங்களுடைய பங்க அமைதிகள் ஆகமத்தில் உண்டு.
(5) ஊறுபட்ட திருவுருவங்களை வழிபடுதல் ஆகமத்திற்கு விரோதமானது.

**48.** ஆறுமுக நாவலரின் கல்விப்பணி
(1) நூல்களை எழுதியமை
(2) பிரசங்கங்களை ஆற்றியமை
(3) அச்சியந்திர சாலைகளை நிறுவியமை
(4) கண்டனப் பிரசுரங்களை வெளியிட்டமை
(5) பிரபந்தங்களை இயற்றியமை

**49.** நல்வழி
(1) திருவைந்தெழுத்தின் பெருமையைக் கூறுவது
(2) திருநீற்றின் பெருமையைக் கூறுவது
(3) வினைப்பயன் பற்றிக் கூறுவது
(4) வேதத்தின் சிறப்புப் பற்றிக் கூறுவது
(5) மனிதன் நல்வாழ்வு வாழ வழிகாட்டுவது

**50.** சமயப் பரம்பலில் ஊடகம்
(1) தகவல்களைப் பரிமாறுவது
(2) உலகத்தோடு ஒட்டி வாழும் அறிவைத் தருவது
(3) மகோற்சவ விஞ்ஞாபனம் மக்களை சமய வழிப்படுத்துவது
(4) பிரசங்கம் மூலம் சமய உண்மையை விளக்குவது
(5) உலகத்தை ஒரு கிராமமாக மாற்றுவது

* * *

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

| | |
|---|---|
| හින්දු ධර්මය | II |
| இந்து சமயம் | II |
| Hinduism | II |

**42 T II**

පැය තුනයි
*மூன்று மணித்தியாலம்*
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாத்தாளை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ **பகுதி I** இலிருந்து எவையேனும் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இலிருந்து எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (அ) 'இதிகாசம்' என்பதன் பொருளைத் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) இதிகாசங்கள் **மூன்றையும்** பெயரிடுக. (4 புள்ளிகள்)

(இ) மகாபாரதம் காட்டும் வாழ்வியற் சிந்தனைகளை விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) மகாபாரதம் கூறும் சமய நெறிகள் பற்றி விளக்குக. (8 புள்ளிகள்)

**2.** (அ) சைவ நாயன்மார்கள் **நால்வரின்** பெயர்களைத் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) திருஞானசம்பந்தரின் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(இ) திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாற்றினைச் சுருக்கமாக விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) பக்தி இயக்க வளர்ச்சியில் சம்பந்தரின் பங்களிப்பினை விளக்குக. (8 புள்ளிகள்)

**3.** (அ) 'விரதம்' என்பதன் பொருளைத் தருக. (2 புள்ளிகள்)

(ஆ) சிவ விரதங்கள் **நான்கின்** பெயர்களைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

(இ) மேலே (ஆ) இல் குறிப்பிட்ட சிவவிரதங்களில் **ஒன்றின்** சிறப்புக்களை விவரிக்குக. (6 புள்ளிகள்)

(ஈ) விரதங்களை அனுட்டிப்பதால் ஏற்படும் மனித மேம்பாட்டினை விளக்குக. (8 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** ஆதிசங்கரரின் அத்வைத வேதாந்தத்தை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) பிரமாணங்கள்

(ஆ) பிரதிவிம்பவாதம்

(இ) விவர்த்தவாதம்

(ஈ) ஆன்ம விடுதலை (5 × 4 = 20 புள்ளிகள்)

**5.** சைவசித்தாந்த தத்துவத்தின் சிறப்பியல்புகளை மேல்வரும் தலைப்புகளில் விவரிக்குக.

(அ) பிரமாண நூல்கள்

(ஆ) ஆன்மாவின் உண்மைத்தன்மை

(இ) ஆன்மாவின் இயல்புகள்

(ஈ) வீடுபேற்றுக்கான வழிகள் (5 × 4 = 20 புள்ளிகள்)

**6.** நாட்டார் கலைகளுள் மேல்வருவன பெறுகின்ற முக்கியத்துவத்தினை விளக்குக.

(அ) கூத்து

(ஆ) கரகாட்டம்

(இ) கோலாட்டம்

(ஈ) காவடியாட்டம் (5 × 4 = 20 புள்ளிகள்)

**7.** இந்துக்களின் வாழ்வியலில் மேல்வருவன பெறுகின்ற முக்கியத்துவத்தினை மதிப்பிடுக.

(அ) ஆத்திசூடி

(ஆ) பகவத்கீதை (10 × 2 = 20 புள்ளிகள்)

**8.** இலங்கையின் இந்துசமய வரலாற்றில்,

(அ) நகுலேச்சரம்

(ஆ) கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

ஆகிய திருத்தலங்கள் பெறுகின்ற சமூக முக்கியத்துவத்தினை விளக்குக. (10 × 2 = 20 புள்ளிகள்)

* * *


අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

LOL Book Store

# 25% OFF ALL BOOKS

Including Exercise Books,
CR Books, and B5 Books




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

**ORDER BOOKS FROM LOL BOOKS STORE**

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP – 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!